**தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(அ), (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**(அ) வைப்பு பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் புத்தகங்களினதும், திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் வைப்பு கணக்கின் பெறுவனவுகளில் ரூபா 652,148 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பரீட்சித்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையில் 2019 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் கிடைத்திருந்ததாகவும், 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு முன்னைய ஆண்டின் பொழிப்பு அறிக்கையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை ஆய்வு செய்து தேவையான சீராக்கங்கள் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் புத்தகங்களினதும், திறைசேரி புத்தகங்களினதும் பிரகாரம் பொது வைப்பு மீதி இணக்கம் செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஏனைய பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 மாவட்ட அலுவலகங்களினால் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் பெறப்பட்ட மற்றும் பொருட்கள் ஏலவிற்பனையில் இருந்து கிடைத்த ரூபா 2,151,773 தொகை ஏனைய பெறுவனவாக மீளாய்வாண்டின் கணக்கில் உள்ளடக்க வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுமதிக்குரிய தகவல்களை சரியாக இனங்கண்டதன் பின்னர் உரிய பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | ஆண்டின் சகல பெறுவனவுகளும் சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 520 கமநல சேவை நிலையங்கள், 05 இயந்திர தளங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தின் காணி என்பன நிதியல்லா சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | திணைக்களத்திற்குரிய சகல காணிகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) திணைக்களத்திற்கு சொந்தமான 408 கலநல சேவை நிலையங்கள், 03 இயந்திர தளங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தில் 03 கட்டிடங்கள் என்பவற்றின் கட்டிட பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லா சொத்துக்களின் கீழ் | பிரதான அலுவலத்தினதும், 09 நிலையங்களினதும் கட்டிட திட்டத்தின் பிரதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், தற்போது மதிப்பீட்டு பெறுமதி | திணைக்களத்திற்கு சொந்தமான சகல கட்டிடங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெறப்பட்டுள்ளதுடன், ஏனைய கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (இ) | முன்னைய ஆண்டின் போது ரூபா 26,969,617 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நீர் முகாமைத்து உபகரணங்கள் நிதியல்லா சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உபகரணங்கள் ஆண்டின் போது நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் என அறியத்தருகின்றோம். | நிதியல்லா சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது அநுராதபுரம் கலங்குட்டிய கமநல சேவை நிலையத்தில் ரூபா 9,200,516 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் நிதி நிலைமைக் கூற்றில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணத்தின் கீழ் காண்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்து பதிவேட்டிற்காக இந்த ஆண்டு முதல் ஆரம்ப மீதியாக உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சகல நிர்மாணங்களும் நிதியல்லா சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது ரூபா 74,658,092 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 3,000 நீர் உயர சீராக்கிகள், ஒரு நுண்ணோக்கி, 20 மழைமாணி கட்டளைகள், 98 அதிதொழில்நுட்ப அளவிடல் உபகரணங்கள், 90 மீற்றர் நீர் நியமம் அளவிடும் உபகரணம் மற்றும் மென்பொருள் முறைமையொன்று, பாதுகாப்பு கமெரா முறைமையொன்று, 04 கணனி மொனிட்டர் மற்றும் நிழற்பட பிரதி இயந்திரம் என்பன நிதிக் கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களின் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த உபகரணங்கள் இந்த ஆண்டின் போது ஆரம்ப மீதியாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிதியல்லா சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற ‘‘சம்பத் பெத்திகட’’ என்ற வெளியீட்டில் காண்பிக்கப்படுகின்ற திணைக்களத்திற்கு | ஆண்டின் ஆரம்ப மீதியாக நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற்கு சொந்தமான சகல கட்டிடங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான 519 உரக் களஞ்சியங்கள், 06 சுற்றுலா விடுதிகள், 152 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 20 உணவகங்களின் பெறுமதி என்பன நிதியல்லா சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | மீளாய்வாண்டில் ரூபா 4,225,373 தொகையில் மிஹிந்தலையில் சுற்றுலா விடுதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட வீட்டு தளபாடங்கள் மற்றும் பிரதான அலுவலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அலுவல உபகரணங்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த உபகரணங்களுக்காக தற்போது வரையிலும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன், எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி முடிவுறுத்தப்படும் என அறியத்தருகின்றோம். | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சகல கொடுப்பனவுகளும் பூர்த்தி செய்யப்பட்டமையினால் நிதியல்லா சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | பிரதான அலுவல கட்டிடத்தில் நான்கு மாடி நீடிப்பொன்றை சேர்ப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 61,980,493 தொகை மூலதன சொத்துக்களின் கைப்பற்றல் மீண்டெழும் மற்றும் அபிவிருத்தியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த தொகை நிதியல்லா சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மீண்டெழும் மற்றும் அபிவிருத்திக்காக கிடைக்கின்ற நிதி ஏற்பாடுகள் உரிய செலவின தலைப்புகளுக்காக செலவிடப்பட வேண்டும். |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------------------- | ---------------- | ------------------------------ |
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முற்பணம் அறவிடல் மற்றும் முற்பணம் செலுத்துதல் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்த | இந்த தவறு 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் சரியாக பதியப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அது நிதி செயற்பாடுகளின் கீழ் வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுடன் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் மற்றும் பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 2,151,773 தொகையான வருமானம் ஒன்று பொது வைப்பு பெறுவனவாக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் பெறுவனவுகள் அந்த பெறுமதியால் அதிகரித்தும், வருமான பெறுவனவுகள் அந்த பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த பெறுமதிக்குரிய தகவல்களை இனங்கண்டதன் பின்னர் உரிய பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

திணைக்களத்தினால் கீழே காணப்படுகின்ற பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச்செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 891(i) இன் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்காக பிணைப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகங்களில் பிணைப் பதிவேடு அந்தந்த மாவட்ட அலுவலகங்களினால் பேணிச்செல்வதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | சகல பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களும் பிணை வைப்புச் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 1645 இன் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டு புத்தகம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 1645 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.5 கணக்காய்வு சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் விபத்து கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு தேவையான சகல தகவல்கள், கோவைகள் மற்றும் சான்றுகள் வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **மீண்டெழும் செலவினம்** | | |
| | 01 செலவின விடயத்தின் நிதிஏற்பாடு ரூபா 100,000 நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த மாற்றல்கள் நூறு சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு செலவின விடயத்தில் ரூபா 30,000,000 தொகை நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அதில் 83 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | ஆதனக் கடன் விண்ணப்பித்த உத்தியோகத்தர்களுக்காக செலுத்துவதற்கு ஏற்படும் என எதிர்வுகூறப்பட்ட வட்டி தொகைக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், COVID தொற்று நோய் நிலைமையின் காரணமாக வங்கியினால் கடன் பணம் வழங்குதல் | மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

தாமதமடைந்தமை மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கடன் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை என்பவற்றினால் இந்த நிதி ஏற்பாட்டின் அளவு சேமிக்கப்பட்டிருந்தது. பல வருட காலம் முதல் செலுத்துவதற்கு முடியாதிருந்த நிலுவை சம்பளத்தை செலுத்துவதற்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் பெறப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியின் போது போதியளவான கட்டுநிதி கிடைக்கப் பெறாமையின் காரணமாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இந்த நிலுவை சம்பள அளவை 2021 ஆம் ஆண்டிலும் செலுத்துவதற்கு முடியாது எஞ்சி இருந்தமையை தயவுடன் அறியத்தருகின்றோம்.

(ஆ) **திறைசேரி கட்டுநிதி பெறுவனவு**

---------------------------------------------------

| | | |
|---|---|---|
| உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறிய நீர்ப்பாசன மீளமைப்பு கொடுப்பனவுகளுக்காக 2020 திசெம்பர் 29 ஆம் திகதிய பாராளுமன்ற கோரிக்கையின் அடிப்படையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி திறைசேரியில் | இறுதி கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் மாவட்ட செயற்திட்ட பொறுப்பு பரிசோதகரினால் சுட்டிக்காட்டப்பட்ட சில குறைபாடுகளின் காரணமாக | ஆண்டிற்குரியதாக திறைசேரியில் இருந்து கிடைத்த சகல நிதி ஏற்பாடுகளையும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்து ரூபா 25,916,619 கட்டுநிதி தொகையொன்று கிடைத்திருந்த போதும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் குறைபாடுகள் காணப்பட்டதாக காண்பித்து கொடுப்பனவு செய்யப்படாமல் அந்த மொத்த பணமும் திறைசேரிக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை கைவிடுவதற்கு ஏற்பட்டிருந்தது. அதனால் திறைசேரி பொது வைப்புக் கணக்கில் இருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நிதி உதவி தொகை அந்த கணக்கின் வைப்பில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

-----------------------------------------------------------------------------------

பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உரியதாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஏனைய முறையில் ஏற்பாடுகளை கவனத்தில் கொண்ட சந்தர்ப்பங்களின் போது தவிர வருடாந்த மதிப்பீட்டு தொகை நிதி ஏற்பாடு இருக்குமாயின் தவிர எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலையோ அல்லது சேவையோ அல்லது வழங்களுக்காகவோ எந்தவொரு செலவினங்களோ அல்லது கடப்பாடுகளுக்கோ கடப்பாடுகளை ஏற்படுத்த முடியாதிருந்த போதிலும் திணைக்களத்தினால் 03 மூலதன செலவின விடயங்களில் சேமிப்பை விஞ்சி ரூபா 1,390,244 தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப நிதி ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட கடப்பாடுகளுக்காக இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின் மூலம் நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. அதனால் உள்ளபடியாக ஏற்படுத்தப்பட்ட கடப்பாடுகளுக்காக நிதி ஏற்பாடுகள் போதியளவில் இல்லாதிருந்தமையை தயவுடன் அறியத்தருகின்றோம். | சேமிப்பினை விஞ்சி செலவினங்களோ கடப்பாடுகளோ ஏற்படுத்த முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது 02 செலவின விடயங்களில் மூலதன மற்றும் மீண்டெழும் நிதி ஏற்பாடுகளின் சேமிப்பு முறையே ரூபா 254,728,219 தொகை மற்றும் ரூபா 55,510,999 ஆக இருந்த போதும், திறைசேரியில் இருந்து கட்டுநிதி போதியளவான பிரகாரம் கிடைக்காமையினால் ரூபா 196,325,746 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கட்டுநிதியை போதியளவான பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான வரை முயற்சி செய்தல் வேண்டும். |
| (இ) | 281-2-2-8-2104 என்ற செலவின விடயத்தின் கீழ் புத்தளம் கமநல சேவை நிலையத்தில் உரக் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்குரிய ரூபா 1,111,625 கடப்பாட்டுத் தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தமை வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கையில் காண்பிக்கப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 1,353,009 ஆக காண்பிக்கப்பட்டமையால் கடப்பாடுகள் ரூபா 241,384 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வேறுபாடுகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஈ) | குருநாகல் மாவட்ட அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் செலவின விடய இலக்கம் 281-2-2-0-2001 கட்டிடம் மற்றும் நிர்மாணத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 1,797,029 தொகையான கடப்பாடுகளின் பெறுமதி அட்டவணை iii இல் காண்பிக்கப்படாமையின் காரணமாக கடப்பாடுகளின் பெறுமதி அந்த மீளமைப்பில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியான பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாடு இல்லாமையின் காரணமாக 25 செலவின விடயங்களில் ரூபா 36,919,972 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொறுப்புக்கள் சரியான பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய பொறுப்பு நிதியத்தில் இருந்து 06 விவசாய வங்கி கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 22,800,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 5,980,000 தொகை செலவில் 04 கட்டிடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்த நிர்மாணம் 2020 மார்ச் 31 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | குறித்த திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

(ஆ) **ஹெல சுவய நியமு செயற்திட்டம்**

-------------------------------------

| | | |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது விசம் நச்சுக்கள் தவிர்ந்த பாரம்பரிய நெல் இனங்களை பயன்படுத்தி 10,000 ஏக்கர் அளவில் பயிர்செய்து 18,000,000 கிலோ கிராம் நெல் விளைச்சளை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் மஹாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் இலக்கம் 118-2-3-20-2509 என்ற செலவின விடயத்தின் கீழ் விதை நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் இலக்கம் 118-2-4-1405 என்ற செலவின விடயத்தின் கீழ் இலகுவில் கரைசல் பசளைகளை பெற்றுக் கொள்வதற்கும் ரூபா 82,600,000 தொகை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ராஜாங்கனை வம் இவுறு கமநல சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்குரியதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை சரியாக திட்டமிட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (i) அந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி 3,152 ஏக்கர் வயலில் பயிர்செய்து 1,974,350 கிலோ கிராம் நெல் விளைச்சல் பெறப்பட்டிருந்ததுடன், அது எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலில் 11 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |

(ii) மேலேயுள்ள பயிர் செய்கைக்காக 181,641 கிலோ கிராம் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத விதை நெல் 57,865 கிலோ கிராம் ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் ''ஹெல சுவய'' என்ற பெயரில் தனியார் நிறுவனம் ஒன்றினால் கரைசல் பசளை 18,056 லீட்டர் பெறப்பட்டிருந்ததுடன், அதற்காக அந்த நிறுவனத்திற்கு ரூபா 18,500,000 செலுத்த வேண்டியிருந்தமை உரிய நிறுவனத்தில் காண்பிக்கப்பட்ட போதிலும், அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு திணைக்களத்திடம் எழுத்து மூல சான்றுகள் காணப்படவில்லை.

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பாக இணக்கக் கூற்று

---

இது தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 118 இன் பிரகாரம் இடம் மாற்றலாகி வந்த மற்றும் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 03 மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடம் மாற்றலாகி வந்த மற்றும் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றற்கை 118 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதி முறையே ரூபா 117,616 மற்றும் ரூபா 1,683,639 ஆக காணப்பட்டது. | | |
| (ஆ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் ஏனைய கடன் மீதிகளில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 18,345,493 ஆக இருந்ததுடன், அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி 8,267,272 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பிணையாளர்களிடம் இருந்தும், ஓய்வூதியத்தில் இருந்தும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலமும் பொறுப்புக்களை கைவிட்டுச் சென்றவர்களிடம் இருந்து அல்லது ஏனைய பொருத்தமான திட்டமொன்றை பின்பற்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபைக்காக இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,083,808 ஆக இருந்ததுடன், அதில் 05 வருட காலத்தை விஞ்சிய கடன் மீதி ரூபா 722,730 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடன் மீதிகள் தாமதமின்றி தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

**2.5 வைப்புக்கள்**

---------------------

நிதிக் கூற்றுக்களுக்குரிய வைப்பு கொடுப்பனவுகள் மற்றும் மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வு பெற்றுச் சென்ற அரசாங்க உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்ட ரூபா 262,519 தொகையான ஊழியர் கடன் மீதி கமநல சேவைகள் நிலையங்களுக்கு அனுப்பாமல் பிரதான அலுவலத்தில் பொது வைப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது இந்த மீதிகளை தனித்தனியாக இனங்கண்டதன் பின்னர் மாவட்ட அலுவலகங்களுக்கு தீர்த்து வைப்பதற்காக உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கமநல சேவைகள் நிலையங்களுக்குரிய பணம் தாமதமின்றி செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 06 மாவட்ட அலுவலகங்களின் நிறுத்தி வைத்தல் ரூபா 12,481,081 தொகை 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், உரிய ஒப்பந்தங்களில் காணப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கோ அல்லது இல்லாதிருக்குமாயின் அந்த நிறுத்தி வைத்தல் பணத்தை பயன்படுத்தி அந்த குறைபாடுகளை பூர்த்தி செய்து உரிய நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்த்து வைப்பதற்கோ 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய ஒப்பந்த நிறுத்தி வைத்தல் வைப்புக்களில் இது வரையில் ரூபா 04 மில்லியனுக்காக வேண்டுதல் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், கட்டுநிதி போதியளவில் கிடைக்காமையினால் கொடுப்பனவுகள் தாமதமடைந்திருந்ததுடன், மிகுதி நிறுத்தி வைத்தல் பணத்தை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | ஒப்பந்த கொடுப்பனவுகளில் குறைபாடுகளை பூர்த்தி செய்து மிகுதி பணத்தை தாமதமின்றி செலுத்துதல் வேண்டும். |
| (இ) | குருநாகல் மாவட்ட அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டின் போது பொருள் ஏலவிற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 5,452,750 தொகை பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | டெக்டர் மற்றும் உதிரிப்பாகங்கள் ஏல விற்பனை செய்யப்பட்டதில் கிடைத்த பணத்திற்காக வேண்டுதல் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் கட்டுநிதி போதியளவில் கிடைக்காமையினால் கொப்பனவுகள் தாமதமடைந்திருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | விற்றுத் தீர்த்தல் வருமானம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 03 மாவட்ட அலுவலகங்களின் செயற்திட்டங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமையால் பொது வைப்புக் கணக்குகளில் ரூபா 1,117,847 தொகையான நிறுத்தி வைத்தல் பணமொன்று 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அந்த ஒப்பந்தங்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்து நிறுத்தி வைத்தல் பணத்தை மீளசெலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஒப்பந்தங்களில் பின்னைய காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் தற்போது உரிய நிலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தமையினால் அதற்காக செலவான தொகையை கணிப்பிட்டதன் பின்னர் நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து அறவிட வேண்டிய தொகையை உறுதிப்படுத்திய பின்னர் மிகுதி நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | ஒப்பந்த குறைபாடுகளை நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து மேற்கொண்டு மிகுதி பண உரித்தை தாமதமின்றி உறுதிப்படுத்தி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கை தீர்த்து வைப்பதற்காக திணைக்களம் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்ட ரூபா 386,132 தொகைக்குரிய கடன் மீதியை தீர்த்து வைக்காமல் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இந்த தொகை உரிய உத்தியோகத்தரின் முற்பண கடன் மீதியில் சீராக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கமநல சேவைகள் நிலையத்தினால் சேகரிக்கப்பட்ட ஏக்கர் வரி மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பபட்டவுடன் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் 06 மாவட்ட அலுவகங்களினால் சேகரிக்கப்பட்ட ரூபா 2,916,607 தொகையான ஏக்கர் வரி வருமானம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிய ஏக்கர் வரி பணத்தை விரைவாக பிரதான அலுவலகங்களுக்கு அனுப்புமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | கமநல அபிவிருத்தி நிதியத்திற்குரிய வருமானங்கள் அந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | 05 மாவட்ட அலுவலங்களில் கேள்வி வைப்புக்களில் மீள பணம் பெற்றுக் கொள்வதற்கான வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் கட்டுநிதி கிடைக்காமையினால் செலுத்தப்படாத வைப்புப் பணம் ரூபா 5,524,474 ஆகும். | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொது வைப்புக்களை தீர்த்து வைப்பதற்காக திறைசேரியில் இருந்து கட்டுநிதி கோரிக்கை கிடைக்கப் பெறவில்லை. கட்டுநிதி கிடைத்ததும் உடனடியாக பொது வைப்புக் கணக்கை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | கட்டுநிதியைப் பெற்று தீர்த்து வைக்க வேண்டும். |
| (ஏ) | மொனராகலை மாவட்ட செயலகத்தினால் 50 சதவீத பங்களிப்பை அறவிடும் அடிப்படையின் கீழ் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விவசாய உபகரணங்களுக்காக மொனராகலை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது அறவிடப்பட்ட ரூபா 1,132,000 | மிகுதியை தீர்த்து வைப்பதற்காக வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்ட போதும் கட்டுநிதி போதியளவில் கிடைக்காமையின் காரணமாக தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்ததுடன் கட்டுநிதி கிடைத்ததும் உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | உரிய பணம் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | 04 மாவட்ட அலுவலகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த உர மானிய தொகையில் எஞ்சியிருந்த ரூபா 6,567,560 தொகையான பணம் பிரதான அலுவலத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஊர மானிய உதவியின் கீழ் பெறப்பட்ட பணம் உரிய அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் மாவட்ட அலுவலகங்களினாலேயே அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டு தீர்த்து வைப்பதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | தாமதமின்றி உரிய பிரகாரம் தீர்த்து வைக்கப்பட வேண்டும். |
| (ஒ) | அம்பாறை மாவட்ட அலுவலகம் 2018 ஆம் ஆண்டின் போது பழைய விவசாய இயந்திரங்களின் ஏலவிற்பனையில் இருந்து பெற்ற விற்பனை வருமானமான ரூபா 1,967,600 தொகை கமநல அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த விவசாய இயந்திரங்கள் ஏல விற்பனையில் இருந்து பெறப்பட்ட விற்பனை வருமானம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறில்லையாயின் அரசாங்க வருமானத்திற்கு செல்ல வேண்டியதான என விசாரனையில் காணப்படுவதுடன் அது பூர்த்தி அடைந்ததும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஓ) | அம்பாறை மாவட்ட அலுவலகத்தில் இறப்பர் நாற்றுக்களை மீண்டும் பயிரிடுவதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து கிடைத்த ரூபா 1,097,292 தொகை உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் பொது வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிய செயற்திட்டத்தின் இறுதிப் பட்டியல் தற்போது தயாரிக்கப்படுவதுடன் அது கிடைத்ததும் உடனடியாக பட்டியல்களை செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | ஏனைய நிறுவனங்களில் இருந்து கிடைத்த பணம் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | குருநாகல் மாவட்ட அலுவலத்தில் 2019 ஆம் ஆண்டின் போது றஸ்நாயகபுற கனுகெட்டிய மூடுத்தவ குளத்தை அபிவிருத்தி செய்வதற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 402,225 தொகை நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படமால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தாமதமின்றி உரிய பணியில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான வகையில் குறித்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்ட சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்காகவும் உரிய விளக்கமளித்தல்கள் மாவட்ட அலுவலகம் மற்றும் அந்தந்த நிலையங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்கள் கோவையிடப்பட வேண்டியிருந்தமையினால் பதில் வழங்குதல் சில சந்தர்ப்பங்களின் போது தாமதமடைந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(உ) உப பிரிவின் செயற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான முறைமை ஒன்று உள்ளதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (இ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக மீளாய்வுசெய்து எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. -மேற்படி- |

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் (திருத்தப்பட்ட) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் | | | |
| | 51 (1)ஆம் பிரிவு | கமநல அபிவிருத்தி சபை தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கட்டளைகள் தயாரிக்கப்பட்டு விதிகளின் வரைவு வழங்கல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பெற்றதன் பின்னர் கட்டளைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் | எல்லங்கா செயற்திட்டத்தின் | எதிர்காலத்தில் இது | உரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டம் | கீழ் நியமிக்கப்பட்ட தற்காலிக உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கான தவணைப் பணமான ரூபா 1,585,415 தொகை இலங்கை மத்திய வங்கிக்கும் தொழில் திணைக்களத்திற்கும் அனுப்பப்படாமல் பிரதான அலுவலகத்தில் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் இது தொடர்பாக அறிக்கை இடப்பட்ட போதிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>----------------------- | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக் கணக்குகளின் இறுதி மீதி ஓய்வுபெறச் செய்யவேண்டி இருந்த போதிலும் 04 பொது வைப்புக் கணக்குகளில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 64,853,898 தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 104(1)(அ) | நட்டம் அல்லது இழப்பு அல்லது சேதம் ஒன்று ஏற்படுமாயின் உடனடியாக அதன் அளவு மற்றும் காரணங்கள் குறிப்பாக இனங்கண்டு அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை நிர்ணயிப்பதற்காக விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டி இருந்த போதிலும் 03 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை தீர்மானிப்பதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645(ஆ) | ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதிகளும் 268 ஆவது பொது படிவத்தில் நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் வைத்துக்கொள்வதற்கு நிர்வாக உத்தியோகத்தர்கள் அதனை தினந்தோறும் பரீட்சிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் 14 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணை சாரதிகளினால் எழுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நிதிப் பிரமாணம் 1646 | 265(அ) என்ற பொது மாதிரி படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூல பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 14 வாகனங்களுக்கு அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 1647 (உ) | வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் தமது பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பாக அந்தந்த வாகனத்தின் வகை மற்றும் வடிவங்களுடன் பதிவு இலக்கமும், தமக்கு கையளிக்கப்பட்ட திகதியும், கையளிக்கப்பட்ட திகதி தொடர்பான விபரங்களும், ஏனைய தகவல்களையும் காண்பிக்கின்ற பட்டியலொன்று வைத்திருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஈ) **அரச நிர்வாக**

**சுற்றறிக்கை**

**-------------------------------**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் அளவு ஓடியதன் பின்னர் அல்லது எஞ்சினுடன் தொடர்புடைய பிரதான பழுதுபார்த்தல்களின் பின்னர் போன்ற காரணங்களுக்கிடையே ஆரம்பத்தில் ஈடுபடுத்துகின்ற சந்தர்ப்பங்களுக்கு பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளவேண்டிய போதிலும், திணைக்களத்தின் 137 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(i) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரிய பிரஜை / சேவைபெறுனர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | **அரச நிதி சுற்றறிக்கை**<br>--------------------------- | | | |
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப் பிரமானம் 770(4)(ஆ) | விஷேட பரிசோதனை சபையொன்றின் பரிந்துரையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 02 இயந்திரங்கள், 2018 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 07 இயந்திரங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 26 வாகனங்கள் என்பன 2021 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் விற்றுத் தீர்த்தல் குழு நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி கோவையின் 06 ஆம் இலக்கத்தின் 2 ஆம் பிரிவு. | நிதிக்கூற்றுக்கள் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2018 மே 10 ஆம் திகதிய 265/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | 2018 சனவரி 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியையும் மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களுக்காக அரச பொதுத் துறை கணக்கீட்டு நியமம் அமுல்படுத்தப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும், திணைக்களத்தினால் கமநல சேவைகள் நிலையங்களின் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் அறிக்கை தயாரித்தல், பாதீட்டு தரவுகள் சமர்ப்பித்தல், முன்னைய காலப்பகுதியின் சீராக்கங்கள் போன்றவை அடங்கிய கடிதம் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. | வருமானங்கள் மற்றும் செலவினங்கள் சரியாக இனங்காண்பதைப் போல கமநல சேவைகள் செயற்குழு / அபிவிருத்தி சபைகளின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்குரிய எதிர்காலத்தின் போது தயாரிப்பதற்கு எதிர்பார்த்த கணனி மென்பொருளை தயாரிக்கும் வசதிகளை வழங்கும் வகையில் கமநல அபிவிருத்தி செயற்குழு / அபிவிருத்தி சபைகளில் இனங்காணப்பட்டுள்ள சகல வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்காக தலைப்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கமநல சேவை நிலையங்களின் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 3/2019 ஆம் இலக்க அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் XV ஆம் பிரிவு | ஒப்பந்த அடிப்படையில் ஆகக் கூடிய சேவைக் காலம் ஒரு வருடம் ஆக மாத்திரம் இருக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் தொடர்ச்சியாக சேவை முறிவின்றி பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர், பொறியியலாளர், நிர்வாக உத்தியோகத்தர் போன்ற 18 உத்தியோகத்தர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | **திணைக்கள சுற்றறிக்கை**<br>--------------------- | | | |
| (i) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 30(iii) ஆம் பிரிவு | 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய கமநல சேவைகள் செயற்குழுவின் 09 நிதிக்கூற்றுக்களும், 2020 ஆம் ஆண்டிற்குரிய கமநல சேவைகள் செயற்குழுவின் 544 நிதிக் கூற்றுக்களும் குறித்த திகதியில் உள்ளவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அம்பாறை மாவட்டத்தில் லாகுகல, பானம போன்ற 02 கமநல சேவைகள் நிலையங்களுக்குரிய நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் நிலுவை நிதிக் கூற்றுக்களாக குறிப்பிடப்பட்டமை சரியானதாகும். 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு உரிய திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மாதிரி படிவங்களுக்குரியதாக நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | ஆணையாளர் நாயகத்தின் 2018 திசெமபர் 28 ஆம் திகதிய "7/6/4/1 ஓட்டக் குறிப்புக்கள்" ஆம் இலக்க ஆலோசனைக் கடிதம் | உரிய மாதத்தின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் வழங்கப்பட்டமை விடயப் பொறுப்பு உத்தியோகத்தரின் உரிதிப்படுத்தலின் அடிப்படையில் மாத்திரம் மேலதிகநேர படிகள் செலுத்த வேண்டியிருந்த போதிலும் நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்காத 17 சாரதிகளுக்காக ரூபா 3,264,231 மேலதிக நேர படியாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களினால் மாவட்டங்களுக்குரிய 339 கமநல சேவை நிலையங்களில் கூட்டுமொத்தமாக 76,350,549 தொகையொன்று மீண்டும் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டது. சில கமநல சேவைகள் நிலையங்களில் ரூபா 3,520,000 போன்ற கணிசமான பணத்தொகையொன்று பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அப்பணம் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறான பொறுப்புக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கமநல சேவைகள் செயற்குழு சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுயாதீன நிறுவனமாக இருந்தமையால் மாவட்ட அலுவலகங்களினால் பெறப்பட்ட ரூபா 76,350,549 தொகையை மீண்டும் அந்த கமநல சேவை நிலையங்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். |

## 2.9 முற்பணத்தை வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செயல்நிமித்த உப கட்டுநிதியைப் பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரினால் பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன், பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 30 உத்தியோகத்தர்களுக்கு 175 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,544,314 தொகையான முற்பணத்தை தீர்ப்பதற்காக 22 நாட்கள் முதல் 352 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | நாட்டில் காணப்பட்ட COVID - 19 அவசர அனர்த்த நிலைமையின் காரணமாக சாதாரண கடமை நடவடிக்கைகள் பாதிப்படைந்தமையினால் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் குறித்த பணிகளை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு முடியாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | செயல்நிமித்த உப கட்டுநிதி பணிகளை நிறைவுசெய்து குறித்த காலப்பகுதியில் தீர்க்கப்பட வேண்டும். |

## 2.10 வங்கி கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்குகளின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 7,997,356 பெறுமதியான 251 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகங்களில் உள்ள காசோலைகளை தீர்த்து வைப்பதற்கு நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதான அலுவலகத்தில் உள்ள காசோலைகளுக்காக கடிதங்கள் மற்றும் மீள் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், இழப்பு பிணை கிடைத்த காசோலைகளுக்காக புதிய காசோலைகளை விநியோகிப்பதற்கும் ஏனைய | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காசோலைகளை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஒரு மாவட்ட அலுவலகத்தின் வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத ரூபா 63,775 தொகையான கொடுப்பனவு காணப்பட்டதுடன், அதனை இனங்கண்டு காசோட்டில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலத்தில் காணப்பட்ட யுத்த நடவடிக்கைகளின் காரணத்தினால் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் சகல புத்தகங்களும் அழிவடைந்திருந்தன. 2009 ஏப்ரல் மாதம் கிளிநொச்சி இலங்கை வங்கி மூலம் வழங்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், மீண்டும் 2009 மே மாதம் வங்கி கூற்றில் இலங்கை வங்கி புதிய கூற்றொன்றை விநியோகித்திருந்தது. அதில் இனங்காணப்படாத கொடுப்பனவாக ரூபா 63,775 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. வங்கியின் ஆவணங்களும் யுத்த சமயத்தில் அழிவடைந்திருந்தமையினால் இது தொடர்பான விபரங்கள் வங்கியிடமும் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | வங்கி இணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாத மீதிகளை இனங்கண்டு காசேட்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 101,985,237 தொகையான 29 சிறு நீர்ப்பாசன செயற்திட்டங்களுக்காக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையில் ரூபா 48,548,237 தொகை செலவிடப்பட்ட போதும் செயற்திட்டம் அத்திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 6,170,000 தொகையான 02 உரக் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,197,669 செலவிடப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு நிதி உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தில் இயந்திரங்கள் மற்றும் ஊழிய கிரயங்களுக்கான பங்களிப்பாக 2020 ஆம் ஆண்டில் 26 சிறு நீர்ப்பாசன மீளமைப்பு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். |

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் , 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஊழியம் மற்றும் இயந்திரங்களின் கிரயம் ரூபா 37,194,429 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் இறுதி வரையிலும் சிறு நீர்ப்பாசன நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு விவசாய அமைப்புக்களுக்கு வேண்டியிருந்தது. எனினும், ரூபா 17,517,887 தொகையான ஊழியம் மற்றும் இயந்திர கிரயங்கள் செலவிடப்பட்ட 17 செயற்திட்டங்கள் 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கையில் உலர் வலயத்தில் விவசாயிகளுக்கு மழை குறைவாக உள்ள காலங்களின் போது பயிர் செய்கைக்காக ஆகக் குறைந்த நீர் அளவினை பயிர் செய்வதற்கும், தற்போது காணப்படுகின்ற வலு சக்தி சிக்கல்களுக்கு தீர்வாக இலவசமாக கிடைக்கின்ற சூரிய சக்தியில் செயற்படும் நீர் பம்பிகள் மற்றும் நீர்த்துளி தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துவதற்காக 2005 – 2008 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் விவசாய அமைச்சிற்கு ரூபா 2,327,272,272 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்த இந்த முறைமை போசைட் பொறியியலாளர் கம்பனியில் முன்னர் இருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், அவர் உயிர்வாழும் தரவுகள் தொடர்பாக சரியான தகவல்கள் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்படாதிருந்ததாக மாவட்ட அலுவலகங்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கைப் பத்திரத்தின் பிரகாரம் பணம் செலுத்தாது புறக்கணிக்கும் போது சூரிய வலுசக்தி நீர் பொறிமுறைமையை கைப்பற்றுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகள் தொடர்பான தெளிவான ஆலோசனையொன்று | | உடன்படிக்கையின் பிரகாரம் சகல பணத்தையும் விரைவாக அறவிட்டு முடிவுறுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதி ஏற்பாடுகளில் இருந்து 19 கமநல சேவைகள் நிலையங்களுக்கு 7,231 சூரிய சக்தி நீர் பொறிமுறைகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த முறைமைகளுக்காக 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சகல பணமும் அறவிடப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட 2020 யூலை 03 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டியிருந்த தொகை ரூபா 2,264,753,696 ஆக காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்டிருந்த முறைமைகளில் 90 சதவீதம் காணாமல் போயிருந்தமை, பயன்படுத்தாமை, விவசாயிகளின் தகவல்களை கண்டறிய முடியாமை மற்றும் செயற்பாடற்று காணப்படமைகள் என்பன அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் செயற்திட்டதில் இருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உடன்படிக்கையின்றி சூரிய வலுசக்தி நீர் பொறி முறைமை வழங்கப்பட்டிருந்தமை, ஆரம்ப வைப்பு தொகை தொடர்பாகவும் குறித்த பெறுமதியொன்றும் குறிப்பிடப்படாமை, உடன்படிக்கைப் பத்திரத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளினால் பணத்தை குறித்த பிரகாரம் அறவிடுவதில் சிக்கல்கள் தோன்றியிருந்தன. மேலும், விவசாய அமைச்சு மற்றும் போசைட் பொறியியல் கம்பனியுடன் ஆரம்ப சந்தர்ப்பம் முதல் சரியான தொடர்பொன்று இடம்பெறாமையினால் பணத்தை குறித்த பிரகாரம் அறவிட்டுக் கொள்வதில் பிரச்சினைகள் தோன்றியதன் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை. | |
| (இ) | மேலே (ஆ) பந்தியில் காண்பிக்கப்படுகின்ற செயற்திட்டம் தொடர்பாக திறைசேரி பிரதி செயலாளர் மற்றும் விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அறவிடப்பட்ட கடன் தவணை மற்றும் கடன் அளவுகள் தொடர்பான விரிவான பதிவேடொன்று மாதாந்தம் வெளிநாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளருக்கும் இடையே 2007 ஆகஸ்ட் 06 ஆம் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை ரூபா 15,190 தொகை வீதம் 20 தவணைகளில் உரிய கடனை அறவிட்டு அவற்றை விவசாய வங்கியில் வைப்புச் செய்வதற்கும், அறவிடப்பட்ட கடன் தவணை மற்றும் கடன் அளவுகள் தொடர்பாக விரிவான பதிவேடொன்று மாதாந்தம் வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் திணைக்கம் இணங்கியிருந்ததுடன், வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| (ஈ) | விவசாய அமைச்சின் தகவல்களின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் 7,231 சூரிய வலுசக்தி நீர் பொறிமுறைமை 19 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தின் தகவல்களின் பிரகாரம் 7,005 முறைமைகள் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தமை யினால் 226 முறைமைகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வேறுபாடுகளை இனங்கண்டு வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பணம் திருத்தப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சில் இருந்து கிடைத்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 1,579,332 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாணந்துறை உணவகத்தில் நுழைவதற்கு படிக்கட்டுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் பாணந்துறை கமநல சேவைகள் நிலையத்தின் குழு நிதியத்தில் இருந்து ரூபா 197,000 செலவில் படிக்கட்டுகள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், 2020 மார்ச் 31 ஆம் திகதி வரையில் உணவகம் திறக்கப்படாமல் பயன்பாடின்றி காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தாமதம் இன்றி உணவகத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உலக உணவு செயற்திட்டத்தில் இருந்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட CR-0098 என்ற ஜீப் வண்டி 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமாக இருந்த போதும் அந்த ஆண்டு முதல் மாலபே மோட்டார் வாகன தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | CR-0098 என்ற ஜீப் வண்டியை பதிவு செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | 1977 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான கால எல்லையில் 17 உரக் களஞ்சியங்கள் பயன்பாடின்றி காணப்பட்டது. | பயன்படுத்தப்படாத 17 உரக் களஞ்சியங்கள் தொடர்பான குறித்த தகவல்களை சமர்ப்பிப்பதற்காக அதற்குரிய இணைப்புக்களை சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றோம். | உரக் களஞ்சியத்தை செயற்படுநிலைக்கு கொண்டுவருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 21 கமநல சேவை நிலையங்களில் 234 சக்கர டெக்டர்கள், 02 சக்கர டெக்டர்கள் 79 மற்றும் 118 டெக்டர் டேலர்கள், 101 வேளாண்மை வெட்டும் இயந்திரம், 278 தட்டை கொழுக்கி / வளைவுக் கொழுக்கிகள், 254 சேற்று சக்கரங்கள் மற்றும் ஏனைய 1,009 உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் 06 வருடங்கள் முதல் 24 வருடங்கள் வரையிலான காலம் செயற்பாடற்று, பயன்படுத்தப்படாதிருந்ததுடன், உரிய சொத்துக்கள் விற்று தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான பயன்படுத்தப்படாத டெக்டர் மற்றும் விவசாய இயந்திர உபகரணங்களை விற்பதற்கான நடவடிக்கைகைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்கள் துருப்பிடிப்பதற்கு முன்னர் விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 செப்டம்பர் 24 ஆம் திகதி வரை மாஹோ இயந்திர கூடத்தில் காணப்பட்ட செயற்பு நிலையில் காணப்படுகின்ற DAS 91, DAS 55, DAS 97 மற்றும் DAS 86 என்ற இலக்கங்களை உடைய இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018, 2019 ஆம் ஆண்டுகளிலும் சேவையில் ஈடுபடுத்துதல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட DAS 69 ஆம் இலக்க மண்செப்பனிடும் ரோலர் இயந்திரம் பெறப்பட்ட திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சகல சொத்துக்களையும் முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.5 நட்டம் மற்றும் இழப்புக்கள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகன விபத்துக்களில் ஏற்பட்ட ரூபா 29,994 தொகையான நட்ட | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய மீதியை புத்தகங்களில் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்ட போதிலும் அந்த மீதி நிதிக் கூற்றுக்களில் பதிவழிக்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்ட மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் இறுதியில் பதிவழிக்கப்படாத மீதி ரூபா 29,994 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் அறிக்கையிடப்பட்ட போதும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | | இருந்து பதிவழித்தல் வேண்டும். |
| (ஆ) | 04 வாகன விபத்துக்களில் ஏற்பட்ட ரூபா 239,221 தொகையான நட்டப் பெறுமதி 2020 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ஆரம்ப பதிவழிக்கப்படாத மீதியாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தவறு சரி செய்யப்பட வேண்டும். |
| (இ) | PF-8446 ஆம் இலக்க வாகனத்தின் விபத்தினால் ஏற்பட்ட நட்ட இழப்புக்கள் நட்டப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 2,292,458 ஆக இருந்த போதும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 850,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தவறு சரி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | PJ-3228 ஆம் இலக்க வாகனத்திற்கு விபத்தினால் ஏற்பட்ட நட்டம், இழப்பு நட்டப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,013,681 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றில் ரூபா 550,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தவறு சரி செய்யப்பட வேண்டும். |
| (உ) | PJ-3238 ஆம் இலக்க வாகனத்திற்கு விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 1,916,394 ஆக இருந்ததுடன், காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைத்த தொகை ரூபா 1,502,934 ஆகும். அறவிடப்படாத நட்டம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அறவிடப்படாத நட்டம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3.6 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 61 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், முன்னைய ஆண்டுகளின் போது விநியோகிக்கப்பட்ட 78 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2020 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கணக்கீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,475,754,381 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினா பதிவேடு குறித்த காலத்தின் பின்னர் பரீட்சிக்கப்பட்டு கிடைக்கப் பெற்றுள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதிலளிப்பதில் தாமதம் ஏற்படும் ஐயவினா காணப்படுமாயின் அதற்காக இடைக்கால அறிக்கையொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நட்டம் மற்றும் இழப்புப் பதிவேட்டில் 17 வருட காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,026,502 தொகை பரிசோதனை மேற்கொண்டு தீர்த்து வைக்கப்படாமல் நட்ட மீதியாக காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக காணப்படுகின்ற அசாதாரண தாமதங்களை தவிர்த்துக்கொள்ளல் மற்றும் ஏற்பட்டுள்ள நட்டத்தை உடனபடியாக அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 முதல் 2019 வரை நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் 39 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 11,228,726 தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அசாதாரண தாமதமொன்று அவதானிக்கப்படுகின்றமையால் தாமதமின்றி சகல பரிசோதனைகளையும் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். |
| (இ) | விற்றுத் தீர்த்தல் சபையின் மூலம் பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்ட 08 வாகனங்கள் தொடர்பாக அந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | விற்றுத் தீர்த்தல் சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | 2015/2016 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்காக சோள பயிர்ச்செய்கைக்காக 5,386 விவாசாயிகளுக்கு 06 மாதங்களில் அறவிடும் அடிப்படையில் ரூபா 80,790,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 25,976,053 ஆக காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | விரைவாக கடனை அறவிடல் வேண்டும். |
| (உ) | 2019/2020 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்காக சோள பயிர்ச்செய்கைக்காக 4,200 விவசாயிகளுக்கு 06 மாதங்களில் அறவிடும் அடிப்படையில் ரூபா 46,200,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்படாத பணம் ரூபா 1,801,000 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தொடர்ச்சியாக பின் தொடர் நடவடிக்கைகளைச் செய்து கடன் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சாரலங்கா கடன் செயற்திட்டத்தின் கீழ் அநுராதபுரம், குருநாகல், புத்தளம், கொழும்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 33 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,800,000 கடன் தொகையில் ரூபா 11,285,972 தொகை தொடர்ந்தும் மேலும் அறவிட வேண்டியிருந்ததுடன், இந்த கடனை அறவிடும் செயல்முன்னேற்றம் மிகவும் நலிவான மட்டமொன்றில் காணப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் மூலம் சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துதல் நோக்கமாக இருந்த போதும் 2020 ஆம் ஆண்டு வரையில் கடன் வழங்கப்பட்ட 286 விவசாயிகளில் 36 பேர் உரிய செயற்திட்டங்களை அமுல்படுத்தாதிருந்ததுடன், 27 விவசாயிகள் மாதாந்தம் உற்பத்தி செய்கின்ற பசளை அளவு 400 கிலோ கிராமை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தொடர்ச்சியாக பின் தொடர் நடவடிக்கைகளைச் செய்து கடன் அறவிடப்பட வேண்டும். |
| (எ) | 2018 சனவரி 01 ஆம் திகதி அநுராதபுர மாவட்ட அலுவலகத்தில் வட்டருக்காவ விவசாய வீதியை நிர்மாணிப்பதற்காக விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட ரூபா 280,000 தொகை, 02 வருட காலத்தில் அந்த விவசாய வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக 2020 யூலை 13 ஆம் திகதி மற்றும் 2020 ஆகஸ்ட் 24 ஆம் திகதிகளில் விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை ஆண்டின் போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 267 கமநல சேவை நிலையங்களில் கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்தப்பட்டிருந்ததுடன், அதில் 30 இயந்திரங்கள் செயலிழந்து காணப்பட்டது. 71 கமநல சேவை நிலையங்களில் கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப பிரச்சினைகளினால் பிரதான அலுவலகம் எதிர்பார்த்த | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கைவிரல் அடையாள இயந்திரத்தை பொருத்தி அதன் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்கை அறிக்கைகள் இடப்படல் வேண்டும். பிரதான அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய சகல அறிக்கைகளும் குறித்த |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்கள் 02 கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 16 மாவட்ட அலுவலகங்களில் விவசாய வங்கிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள 06 வருடங்கள் முதல் 20 வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 286,664,393 அறவிடப்படாத விவசாய கடன் மீதியொன்றை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தாமதமான கடன் பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஒ) | 413 கமநல சேவை நிலையங்களால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 527,262,332 பெறுமதியுடைய அறவிட வேண்டிய ஊழியர் கடன், விவசாய கைத்தொழில் பொருள் கடன், செயற்திட்ட கடன் போன்ற 4,366 மீதிகள் காணப்பட்டன. மேற்கூறப்பட்ட கடன் மீதியை அறவிடுவதற்கு மாவட்ட அலுவலகத்தினாலும் திணைக்களத்தினாலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடன் மீதி தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (ஓ) | இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற 14 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமநல சேவை நிலையங்களின் 05 எழுதுவினைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒரு நிலையத்தில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நீண்ட காலம் ஒரே நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தாதிருத்தல் வேண்டும். |

**4. நால்லாளுகை**

**4.1 பொதுமக்களுக்கு சேவையை நிறைவேற்றதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு சனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், விவசாய அமைச்சு மற்றும் ''ஜனபதிட்ட கியன்ன'' (சனாதிபதிக்கு சொல்லுங்கள்) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 473 முறைப்பாடுகள் அனுப்பப்பட்டிருந்ததுடன், அதில் 291 முறைப்பாடுகளுக்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளின் போது மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட 1,226 முறைப்பாடுகளின் தற்போதைய நிலைமை பிரதான அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக திட்டமுறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பரீட்சிப்பு, பிரதான அலுவலகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெறுகைகள் பரிசோதனை மற்றும் பழுதுபார்த்தல், குளம் மற்றும் நீரப்பாசன மீளமைப்பு நடவடிக்கைகள், கமநல அபிவிருத்தி நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பரீட்சிப்பு, நிலையங்களின் இறுதி கணக்குகள் போன்ற நோக்கங்கள் 2019 ஆம் ஆண்டினைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 3,700 ஆக இருந்ததுடன், 12 வெற்றிட பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் ஒரு ஊழியரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்), ஆணையாளர் (சேவை) மற்றும் 2020 ஒக்டோபர் மாதத்தில் ஓய்வு பெற்றுச் செல்வதற்குள்ள ஆணையாளர் (அபிவிருத்தி) போன்ற பதவிகளை உள்ளடக்கி அத்தியவசிய பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆணையாளர் பதவிகளுக்கு இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணையாளர் சேவை மற்றும் நிர்வாகம் மனித வள பதவிகளுக்காக இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்கள் பதிற்கடமை மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் என்பவற்றிற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நாடு முழுவதும் 559 விவசாய வங்கிகள் காணப்பட்டதுடன், விவசாய வங்கி உத்தியோகத்தர்களையும், உதவி விவசாய வங்கி உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய சகல பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. விவசாய வங்கி நடவடிக்கைகளுக்காக விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அத்தியவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக கமநல சேவை நிலையங்களின் பல பிரிவுகளுக்கு ஒரு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் வீதம் ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஈ) | திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் ஆளணி கோவைகள் நாளது வரையாக்கப்படாமையினால் சேவையில் நிரந்தரமாக்குதல், சம்பள அதிகரிப்பு, வருடாந்த பதவி உயர்வுகள் போன்ற நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றச்செல்லல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த நிலைமை பாதகமாக தாக்கமளித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஆளணி கோவைகள் நாளதுரையாக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் 23 பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் கமநல ஆராய்ச்சி உத்தியோகத்தர்களில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் 06 வெற்றிடங்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து காணப்படுவதுடன், உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 3/2019 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலக சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் xiv ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பூரண அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒழிய எதிர்காலத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் எந்தவொரு ஓய்வுபெற்றவரையும் சேவையில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஈடுபடுத்த முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் 18 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது மேவுகை அங்கீகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாக ரூபா 1,786,726 தொகை செலுத்தப்பட்டிருந்தது.